http://www.howtoexam.com

BESE-046

# இளநிலை கல்வியியல் பருவத்தேர்வு (B.Ed.)

## Term-End Examination

## June, 2008

## BESE-046 : தமிழ் கற்பித்தல் (TEACHING OF TAMIL)

*Time allowed : 3 hours* *Maximum Weightage : 70%*

குறிப்பு :

*(அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.*

*(ஆ) அனைத்து வினாக்களுக்கும் மதிப்பெண்கள் சமம்.*

**1.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

பள்ளிக் கலைத் திட்டத்தில் தாய்மொழி பெறும் இடத்தை விவரித்துத், தாய்மொழியாகிய தமிழைக் கற்பித்தலின் நோக்கங்களை விவரிக்க.

**அல்லது**



Find information about best Medical, Engineering, and Management colleges

http://www.howtoexam.com

மொழி கற்றலின் நான்கு திறன்களைக் குறிப்பிடுக. இத்திறன்களை தாங்கள் எவ்வாறு மாணவர்களிடையே வளர்ப்பீர்கள் என்பதைத் தக்க சான்றுடன் விளக்குக.

**2.** மொழிப் பயிற்சி என்பது யாது ?

மாணவர்களுடைய மொழித்திறனை வளர்ப்பதற்கு அப் பயிற்சியினை எவ்வெவ் வகைகளில் பயன்படுத்துவீர் என விளக்குக.

**அல்லது**

மொழியாசிரியர் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்பு நலன்களை விவரிக்க.

**3.** கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

(i) நல்ல வினாக்களின் பண்பு நலன்களை விவரிக்க.

(ii) செயல் திட்ட முறை மொழி கற்பித்தலில் எந்த அளவு பயன்படும் என்பதைப் புலப்படுத்துக.

(iii) எழுதக் கற்பிப்பதற்கு முன் தரத் தக்க முற் பயிற்சிகளை விவரிக்க.



Find information about best Medical, Engineering, and Management colleges

http://www.howtoexam.com

(iv) மதிப்பீடு, அளவீடு ஆகிய சொற்களை விளக்கி இரண்டினுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

(v) கட்டுரைத் தேர்வு, புற வயத் தேர்வு ஆகிய வற்றை விளக்கி ஒவ்வொன்றின் குறை நிறைகளைப் புலப்படுத்துக.

(vi) கற்பித்தல் துணைக் கருவிகளுள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றின் பயன்பாடுகளை விவரிக்க.

(vii) கடிதம் எழுதும் கலையைக் கட்டுரை வகுப்பின் மூலம் எவ்வாறு கற்பிப்பீர் ?

(viii) "புளூம்" என்பாரின் வகை தொகை இயல் ஆய்வின்படி "அறிதல்புலம்" தன்னகத்தே கொண்டுள்ள கல்விக் குறிக்கோள்கள் யாவை ?

**4.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாவிற்கு 600 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளை விவரித்து அதனை மாணவர்களிடையே வளர்க்க நீவிர் மேற்கொண்ட வழி முறைகளை விளக்குக.



Find information about best Medical, Engineering, and Management colleges

http://www.howtoexam.com

HowToExam.com

Find information about best Medical, Engineering, and Management colleges